## நவம்பர் – 24 – வெள்ளி

### மறை பரப்பாளர் புனித அன்ட்றூ லாங்க்

### “என் இல்லம் இறைவேண்டலின் வீடு” லூக் 19: 46

**முதல் வாசகம் : 1 மக்கபேயர் 4 : 36 – 37,52 - 59**

அக்காலத்தில் யூதாவும் அவருடைய சகோதரர்களும், ”நம் பகைவர்கள் முறியடிக்கப்பட்டார்கள். இப்போது நாம் புறப்பட்டுப் போய்த் திரு உறைவிடத்தைத் தூய்மைப்படுத்தி மீண்டும் கடவுளுக்கு உரித்தாக்குவோம்” என்றார்கள். எனவே படைவீரர்கள் எல்லாரும் சேர்ந்து சீயோன் மலைக்கு ஏறிச்சென்றார்கள். நூற்று நாற்பத்தெட்டாம் ஆண்டு கிஸ்லேவு மாதமாகிய ஒன்பதாம் மாதம் இருபத்தைந்தாம் நாள் விடியற்காலையில் அவர்கள் எழுந்திருந்து, தாங்கள் எழுப்பியிருந்த புதிய எரிபலி பீடத்தின்மீது திருச்சட்டப்படி பலி ஒப்புக்கொடுத்தார்கள். வேற்றினத்தார் பலிபீடத்தைத் தீட்டுப் படுத்தியிருந்த அதே காலத்தில் அதே நாளில் அது மீண்டும் அர்ப்பணிக்கப்பட்டது. அப்பொழுது பாடல்களும் நரம்பிசைக் கருவிகளும் யாழ்களும் கைத்தாளங்களும் முழங்கின. எல்லா மக்களும் குப்புற விழுந்து தங்களுக்கு வெற்றி அளித்த விண்ணக இறைவனை வழிபட்டு வாழ்த்தினார்கள். பலிபீட அர்ப்பணிப்பு விழாவை எட்டு நாள் கொண்டாடி மகிழ்ச்சியோடு எரிபலிகளைச் செலுத்தினார்கள் நல்லுறவுப் பலியும் நன்றிப் படையலும் ஒப்புக்கொடுத்தார்கள் பொன் முடிகளாலும் குமிழ்களாலும் கோவிலின் முகப்பை அணிசெய்து, வாயில்களையும் அறை களையும் புதுப்பித்துக் கதவுகளை மாட்டினார்கள். மக்கள் நடுவே மிகுந்த அக்களிப்பு நிலவியது வேற்றினத்தாரின் பழிச்சொல் நீங்கியது. ஆண்டுதோறும் குறிப்பிட்ட காலத்தில், அதாவது கிஸ்லேவு மாதம் இருபத்தைந்தாம் நாள்முதல் எட்டு நாள்வரை அக்களிப்போடும் அகமகிழ்வோடும் பலிபீட அர்ப்பணிப்பு விழாவைக் கொண்டாட யூதாவும் அவருடைய சகோதரர்களும் இஸ்ரயேல் சபையார் அனைவரும் முடிவு செய்தார்கள்.

**பதில்பாடல் :** மாட்சிமிகு உம் பெயரைப் போற்றுகிறோம் ஆண்டவரே

**நற்செய்தி : லூக்கா 19 : 45 - 48**

அக்காலத்தில் இயேசு கோவிலுக்குள் சென்று அங்கு விற்பனை செய்து கொண்டிருந்தோரை வெளியே துரத்தத் தொடங்கினார். அவர்களிடம், ”என் இல்லம் இறைவேண்டலின் வீடு” என்று மறைநூலில் எழுதியுள்ளதே ஆனால் நீங்கள் இதைக் கள்வர் குகையாக்கினீர்கள்” என்று கூறினார். இயேசு ஒவ்வொரு நாளும் கோவிலில் கற்பித்து வந்தார். தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞர்களும் மக்களின் தலைவர்களும் அவரை ஒழித்துவிட வழி தேடினார்கள். ஆனால் என்ன செய்வது என்று யாருக்கும் தெரியவில்லை. ஏனென்றால் மக்கள் அனைவரும் அவர் போதனையைக் கேட்டு அவரையே பற்றிக்கொண்டிருந்தனர்.

**தியானம்:** ஆலயங்களின் புனிதத்துவமும், அதன் பயன்பாடுகளும் கால ஓட்டத்தில் குறைந்தே வருகின்றன என்றால் அது மிகையாகாது. வாரத்துக்கொருமுறை கடமைக்காக வந்துபோகின்ற ஒரு இடமாகவோ, உறவினரையும் நண்பர்களையும் வாரமொருமுறை சந்தித்துப்பேசும் ஒரு இடமாகவோ, நமது சுய அல்லது அரசியல் விளம்பரங்களுக்காக பயன்படுத்தும் ஓர் அரங்கமாகவோ இன்று ஆலயங்கள் மாறியிருப்பதை நாம் அவதானிக்கலாம். இவ்வாறான செயற்பாடுகள் தமது தேவைகளை, கவலைகளைக் கடவுளுக்குச் சமர்ப்பிக்கவும், கடவுள் தம் வாழ்வில் புரிந்த பல நன்மைகளுக்கு நன்றி செலுத்தவுமென பலவிதமான தேவைகளோடு வரும் மக்களுக்கு பெரிதும் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதை பல தடவைகளில் நாம் உணரத் தவறிவிடுகின்றோம். நம் சொந்த நாட்டில் ஆலயங்கள் பல சேதப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தவேளை அந்நிய நாட்டில் நமக்கென ஒரு ஆலயத்தைக் கடவுள் தந்திருக்கின்றார் என்றால் அதற்கு நாம் எவ்வளவு மதிப்பும் மரியாதையும் தரவேண்டியவைகள் என்பதை நாம் புரிந்துகொண்டோமா? அதன் புனிதத்துவத்தைக் காக்க நாம் முயற்சியெடுக்க வேண்டாமா? கடவுளின் இல்லம் இறைவேண்டலின் வீடு. வழிபாடுகளில் அனைத்து மக்களும் பங்கெடுத்து ஒரே குரலாக கடவுளை வழிபட்டு வாழ்த்தக்கூடிய வகையில் நாம் பல செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.